
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1035

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

திரைக்கதை வசனம்
## கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

39

# மணிமகுடம்: ஆதிக்கத்தை எதிர்த்த சாமானியர்களின் சமர்!



'மணிமகுடம்' திரைப்படத்தின் தொடக்கமே அபாரமாக இருக்கும். ஐந்து இளைஞர்கள் கைகளில் விலங்கு பூட்டி படைவீரர்கள் சூழ, அழைத்து வரப்படுகின்றனர். அப்போது, அங்கு வரும் வயதான மனிதர் ஒருவர் தன் மகன் வீரமணியை விட்டுவிடும்படி மன்றாடுகிறார். ஆனால், படை வீரன் ஒருவன் துப்பாக்கியால் அவரின் காலில் சுட, அவர் கீழே சரிந்து விழுந்து கதறுகிறார்.

அவரது கதறலைக் கேட்டு ஓடிவரும் அவரின் மகள் பூங்கொடி (ஜெயலலிதா) அவரின் நிலையைப் பார்த்து, அவரிடம்...

**பூங்கொடி :** "அப்பா... அப்பா... இது என்னப்பா கொடுமை?"

**அப்பா :** "மகளே இதைவிடப் பெரிய கொடுமை நடக்கப்போகிறதம்மா. ஐந்து பேரையும் சுட்டுக் கொல்லப்போகிறார்களாம் அக்கிரமக்காரர்கள். அவர்களில் உன் அண்ணன் வீரமணியும் ஒருவனம்மா... வீரமணியும் ஒருவன்'' என்று சொல்லி அழுகிறார்.

**காவலன் :** "சீமான் சபை நிறைவேற்றிய தீர்மானம். மன்னர் மணிமாற பூபதியின் கையொப்பத்துடன் அரசாங்க உத்தரவாக இங்கு வெளியிடப்படுகிறது. அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் அரசரையும் சீமான் சபை உறுப்பினர்களையும், திவான் குணசீலரையும் கொலை செய்ய முயன்ற வளவன், வானவன், வெற்றிவேலன், கதிரவன், வீரமணி ஆகிய ஐவரையும் பொதுமக்கள் முன்னிலையில் சுட்டுக் கொல்ல வேண்டியது. தீர்மானம் சீமான்கள் சபை. உத்தரவு மணிமாற பூபதி மணிமகுட புரியின் மன்னர்" என்று அறிக்கையை வாசிக்கிறான். பிறகு...

**காவலன் :** "கடைசியாக நீ எதுவும் சொல்ல விரும்புகிறாயா?" என்று ஐவரிடமும் வரிசையாகக் கேட்கிறான்...

முதல் நால்வரிடம் 'இல்லை' என்ற பதில் வருகிறது. கடைசியாக வீரமணியிடம் கேட்கிறான்.

**வீரமணி :** "ஐவரும் இன்று சாகின்றோம். அழிந்தது புரட்சி எம்மோடு என்று ஆணவத்தால் ஆடாதீர். இன்று நாங்கள் சிந்தப்போகும் ரத்தத்துக்கு நாளைய தினம், தவறினால் நாளைய, மறுநாள் நிச்சயம் என்றோ ஒருநாள் நீங்கள் பதில் சொல்லியே தீரவேண்டும். இதை அந்த வெறிகொண்ட வேந்தனிடமும் திமிர் கொண்ட திவானிடமும் தெரிவித்து விடு... போ..." என்று முழங்குகிறான்.

ஐவரும் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்.

"அண்ணா..." என்று அலறிக்கொண்டு ஓடி வந்து வீரமணியின் உடல் மீது சாய்ந்து அழுகிறாள் பூங்கொடி.

### எழுச்சியை விதைத்தவர்கள்

அடுத்த காட்சி. தியாகிகள் ஐவரின் உருவப்படங்கள் வரிசையாக வைக்கப் பட்டுள்ளன. அல்லி ஒவ்வொருவரின் புகழையும் குறிப்பிட்டுச் சொல்லி மலர் மாலையை படங்களுக்குச் சூட்டுகிறாள்.

**அல்லி :** "உழவர்கள் மத்தியில் எழுச்சியை விதைத்த வளவன். ஊர் பல சுற்றி, ஆள் பலம் திரட்டி ஓயாது உழைத்த வானவன். கல்லுடைக்கும் தொழிலாளர் கைவண்டி இழுப்போர் இப்படிக் கணக்கற்ற பாட்டாளி மக்களை ஓரணியில் திரட்டி வைத்த வெற்றி வேலர். மணிமகுட புரியின் மக்களுக்காகப் போராடி அதற்குப் பரிசாகக் கிடைக்கும் மரணம்தான் எனக்கு மலர்ச்செண்டு என மார்தட்டி முழங்கிய கதிரவன். வீழ்ந்துவிட்ட என் பிணத்தின் மீது தலைவர் வடிக்கின்ற கண்ணீர்த் துளிகளையே யாசிக்கிறேன் எனக் கூறி நம்மையும் மீறிய தீவிர பயிற்சிக்குத் தீ மூட்டிய வீரமணி... ''என்று கூறி வீரமணியின் படத்துக்கு மாலை அணிவிக்கிறாள்.

மற்றொரு காட்சி. அரசவை, சீமான்களும் அரண்மனைவாசிகளும் வரிசையாக அமர்ந்துள்ளனர். பொதுமக்களும் திரண்டுள்ளனர். அவர்களோடு மக்கள் மன்றத் தலைவன் பொன்னழகனும் அல்லி உள்ளிட்ட மற்றவர்களும் கலந்து நிற்கின்றனர். மதகுரு பேசத் தொடங்குகிறார்...

**மதகுரு :** "பெருமைக்குரிய சீமான்களே, மணிமகுடபுரியை ஆட்சி செய்யும் இந்தச் சபை இன்றைய தினம் செய்ய வேண்டிய தீர்மானங்களில் மிக முக்கியமானது தேவாலயம் ஒன்றை நிர்மாணிப்பது பற்றியதாகும். அதற்குத் தலைநகரில் இடமில்லை. ஆகவே, மிக விசாலமான கொடிக்கால் நகரத்தைக் காலி செய்துவிட்டு அங்கே அந்தக் கோயிலை எழுப்பலாம் என்பது என் யோசனை. என்ன திவான்?"

திவான், சீமான் சபை உறுப்பினர் எல்லோரும் 'சரி' என ஆமோதிக்கிறார்கள்.

**திவான் :** "பொதுமக்களும் தங்கள் எண்ணத்தைத் தெரிவிக்கலாம்."

**பொன்னழகன் :** "கொடிக்கால் நகரத்தில் கோயில் கட்டுவதை நான் எதிர்க்கிறேன். கொடிக்கால் நகரம் ஏழைகள் பகுதி. ஐயாயிரம் குடிசைகளை அழித்துவிட்டு அங்கே ஆலயம் கட்டுவது அனுமதிக்க முடியாத செயல். தேவனுக்கு ஒரு ஆலயம் தேவையானால் அதற்கு வேறு இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்."

**மதகுரு :** "நிறுத்து. மணிமகுடபுரியின் இலட்சோப லட்சம் மக்களுக்கு மோட்சப்பாதை திறக்கப்படுகிறது என்பதை நாம் மறந்து விடலாமா? ஆகவே, ஆலயம் கொடிக்கால் நகரில் அமைத்தே தீர வேண்டும்."

அப்போது 'மறுக்கிறேன்' என்ற சப்தம் மட்டும் கூட்டத்தில் இருந்து கேட்கிறது.

'மறுக்கிறேன்...' என்று கூறியவாறு புதுமைப்பித்தன் (அரசன் மணிமாற பூபதி மாறுவேடத்தில்) வெளியே வருகிறான்.

**மதகுரு :** "யார்?"

**புதுமைப்பித்தன் :** "யார் கேட்டது கோயில்? யாருக்குத் தேவை புதிய கோயில்?"

**மதகுரு :** "ஆண்டவனே கேட்டான்."

**புதுமைப்பித்தன் :** "ஐயாயிரம் குடிசைகளை அழித்துவிட்டு, தனக்காக ஒரு கோயில் கேட்டாரா?"

**மதகுரு :** "ஆமாம்."

**புதுமைப்பித்தன் :** "அப்படிக் கேட்டவர் ஆண்டவராக இருக்க மாட்டார். ஆண்டவனுக்காக நான் பேசுகிறேன். அவருக்குச் சொல்லப்படும் இலக்கணப்படி நல்லவரின் இருதயமே அவருக்கு ஆலயம், வீடு, மாளிகை எல்லாம்."

**திவான் :** "ம்... பொதுமக்கள் அபிப்பிராயம் வழங்குவது இத்துடன் நிறுத்தப்பட்டது."

இப்பொழுது தீர்மானம் நிறைவேறப்போகிறது.

### காலப் பொருத்தமான வசனம்

**புதுமைப்பித்தன் :** "திவான் அவர்களே, ஆண்டவனே விரும்பாத செயல் இது. அன்பைக் கொன்று புதைத்து, அங்கே எழும் ஆலயத்திலே'அன்பே கடவுள்' என்று எழுதாதீர்கள். ஆண்டவனுக்கு அர்ச்சிக்கப்படும் மலர்களிலே அந்த ஏழை மக்கள் சிந்திய ரத்தக்கறையல்லவா படிந்திருக்கும். பக்தரட்சக் கீர்த்தனை கேட்காது, பகவான் சந்நிதானத்திலே வாழ்வை இழந்த பாட்டாளி மக்களின் அழுகுரல் கேட்கும். புலம்பல் கேட்கும். ஒப்பாரி கேட்கும். வேண்டாம், ஆண்டவன் பெயரால் ஆண்டவனுக்கே களங்கம் தேடாதீர்கள்."

**மதகுரு :** "நான் அப்போதே சொன்னேன். இப்படிப்பட்ட பொதுமக்களை அனுமதிக்கக் கூடாது என்று."

**புதுமைப்பித்தன் :** ''பொதுமக்களை அனுமதிப்பது இருக்கட்டும். அரசரையேகூட இந்தச் சபையில் அனுமதிக்கவில்லையே. அனுமதிக்கவில்லையா அல்லது அவர் வர விரும்பவில்லையா?''

**மதகுரு :** ''ம்கூம்... சிக்கல் நிரம்பிய நாட்டுப் பாதுகாப்புப் பிரச்னைகள் தவிர, வேறு பிரச்னைகளுக்கு மன்னர் சீமான் சபைக்கு வருவதில்லை. இதுகூடத் தெரியாத மண்டூகம்."

**புதுமைப்பித்தன் :** "இதுவும் பாதுகாப்புப் பிரச்னைதான். பல்லாயிரம் குடும்பங்களின் பாதுகாப்புப் பிரச்னை...'' என்று பேசுகிறான்.



மணிமகுடம் திரைப்படத்தின் கரு இதுதான். மணிமகுட புரியில் ஆண்டவனுக்கு ஆலயம் கட்டுகிற சாக்கில் மக்களிடையே கலவரத்தை உருவாக்கி, வேங்கை நாட்டு வீரர்கள் ஊடுருவி ஆட்சியைக் கைப்பற்றத் திட்டமிடுகின்றனர். அவர்களது சதிச் செயலை மன்னன் மணிமாறன் கண்டுபிடித்து முறியடிப்பதுடன், மதகுருவின் ஆன்மிகத்தில் மதிமயங்கிப் போய் தலையாட்டும் சீமான் சபையினரை, மத மயக்கத்தில் இருந்து விடுவித்து மக்களைக் காப்பதுதான் திரைப்படத்தின் கதை.

...காட்சி விரியும்

> "மதகுருவின் ஆன்மிகத்தில் மதிமயங்கிப் போய் தலையாட்டும் சீமான் சபையினரை, மத மயக்கத்தில் இருந்து விடுவித்து மக்களைக் காப்பதுதான் திரைப்படத்தின் கதை."

---

## ஆசிரியர் பிறந்த நாள் சிறக்கட்டும்!

திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களுக்கு நாளை மறுநாள் (2.12.2025) 93-வது பிறந்தநாள். பகுத்தறிவுப் பாதை மாறாத போராளியாகத் திகழும், அவரின் பிறந்த நாளை, சுயமரியாதை நாள் விழாவாக, இரண்டு நாள்கள் நிகழ்ச்சிகளை நடத்துகிறது திராவிடர் கழகம்.

1.12.2025 மற்றும் 2.12.2025 இரண்டு நாள் நிகழ்வாக, சென்னை, பெரியார் திடல், எம்.ஆர்.ராதா மன்றத்தில் சிறப்புக் கருத்தரங்க நிகழ்ச்சிகள் ஒருங்கிணைக்கப்படுகிறது. தந்தை பெரியாருக்குப் பின், தொடரும் லட்சியப் பயணத்தில் மைல் கற்கள்' என்கிற தலைப்பில், திராவிடர் கழகத்தின் துணைத் தலைவர் கலி.பூங்குன்றன் தலைமையில் கருத்தரங்க நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

டிசம்பர் 2-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு, தி.மு.கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் சிறப்புரை நிகழ்த்த உள்ளார். அதைத் தொடர்ந்து பட்டிமன்றம், கவியரங்கம், கருத்தரங்கம், நூல் வெளியீடு உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெறுகின்றன. திராவிடர் கழகப் பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி, கவிப்பேரரசு வைரமுத்து, சிந்துவெளி ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன், கவிச்சுடர் கவிதைப்பித்தன், சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷா நவாஸ் உள்ளிட்ட ஆளுமைகள் கலந்து கொள்கின்றனர்.


"என்னை வீறுகொண்டு பணியாற்றச் செய்வது எதிரிகள்தான்! மீறி, வலி வரும்போது, கொள்கை வைரிகளான பகைவர்களின் செயல்பாடுகள்தான் என்னை மீண்டும் வீறுகொண்டு களமாட தூக்கி நிறுத்தி, துவளாது கடமையாற்ற கட்டளை இடுகிறது" என்று சூளுரைக்கும் ஆசிரியர் வீரமணி அவர்களின் பிறந்த நாள் சுயமரியாதை நாள் விழாவாகச் சிறக்கட்டும்!

---

## ஃப்ளாஷ்பேக்



## தமிழிசைப் பாடலுக்குப் பாராட்டு!



கலைமாமணி டி.கே.எஸ். புகழேந்தி

1997-ஆம் ஆண்டு, கலைவாணர் அரங்கில், அன்று தி.மு.கழகத்தில் இருந்த கவிஞர் நிர்மலா சுரேஷ் அவர்களுடைய 'ஹைகூ' கவிதை நூல் வெளியீட்டு விழா, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில், தமிழிசைப் பாடல்களைப் பாடினேன். அதற்காக ஐயா முத்தமிழறிஞர் கலைஞர் பொன்னாடை அணிவித்துப் பாராட்டினார். என் தந்தையார் அவ்வை.டி.கே.சண்முகம் அவர்களுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தவர் கலைஞர். அந்த ஆட்சிக் காலத்தில்தான், என் தந்தையாருடைய நூல்களை நாட்டுடமை ஆக்கினார் கலைஞர். தந்தையார் எழுதிய 'எனது நாடக வாழ்க்கை' நூல் முக்கியத்துவம் கொண்டது என அவர் பாராட்டியதை மறக்கவே முடியாது.

– கலைமாமணி டி.கே.எஸ்.புகழேந்தி,
டி.கே.எஸ். நாடக மன்றம், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## கருவூலம்

### ரயில் மறியல் போராட்டம்!

1953-ஆம் ஆண்டு, ஜூலை 15-ஆம் தேதி, மும்முனைப் போராட்டத்தில் ஒரு போராட்டமாக, ரயில் மறியல் கிளர்ச்சியை நடத்தியது கழகம். சென்னை சென்ட்ரல், எழும்பூர் என இரண்டு நிலையங்களும் கழகத் தொண்டர்களால் நிறைந்தன. அனைத்து ரயில்களும் ரத்து செய்யப்பட்டன. 182 பேர் கைது செய்யப்பட்டனர். மதுரையில் தடியடி, துப்பாக்கிச்சூடு நடைபெற்றன. ஆறு பேர் உயிரிழந்தனர். 750 பேர் கைது செய்யப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131